**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 159-2023**

| L.W.4 P.W.4 | | |
|---|---|---|
| Name: | ராஜேந்திரன் | Caste: |
| Father's Name: | முருகையன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026
(எதிரி ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது ஆயக்காரன்புலத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 15-ஆம் தேதி, மாதம் நினைவில்லை. 2022-ஆம் வருடம், மதியம் 02.00 மணிக்கு மேல், நான் பழையகரம் ஆப்பிள் மாடி கண்ணன் வீட்டிற்கு எதிரில் காரில் வந்தபோது, அங்கு போலிசார் இரண்டு நாட்களுக்கு முன்பு, மணிகண்டன் என்கிற செல்வராஜுக்கும் தங்கராசுக்கும் நடந்த தகராறு பற்றி விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். **என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையதுதான். கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தினை அந்த இடத்திலேயே வைத்து செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

போலிசார் பால் பாயிண்ட் பேனாவால், எழுதிக் கொண்டிருந்த பேப்பரில் தான் நான் கையொப்பம் செய்தேன். மேற்படி பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப் பார்க்கவில்லை என்றால், சரியல்ல. படித்துப் பார்த்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்றால், அ.சா.1-க்கும் எதிரிக்கும் அடிதடி தகராறு நடந்தது என்று எழுதியிருந்தது. வேறு எதுவும் எழுதவில்லை. நான் தற்போது சொன்ன எழுதப்பட்ட பேப்பரில் உள்ள கையொப்பத்தினை தான் நீதிமன்றத்தில் பார்த்தேன் என்றால் சரி. இதற்கு முன்பு நான் கையொப்பம் செய்த பேப்பரை வேறு எங்கும் பார்க்கவில்லை.

புகார் கொடுத்தவர் பெயர் எனக்குத் தெரியாது. நான் நீதிமன்றத்தில் வந்து தான் நான் கையொப்பம் செய்த பேப்பரை படித்துப் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல், எந்த பேப்பரிலும் போலிசார் என்னிடம் கையொப்பம் பெறவில்லை என்றும், போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>அரசு தரப்பில் மறு விசாரணை</u>

சம்பவ இடத்தில் கையொப்பம் செய்த காகிதம், தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜர் காகிதம் இது தானா என்றால் ஆமாம்.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 29.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 159–2023

| L.W.5 P.W.5 | | |
|---|---|---|
| Name: | திருமூர்த்தி | Caste: |
| Father's Name: | சுப்பையயன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:75/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026
(எதிரி ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது ஆயக்காரன்புலத்தில் குடியிருந்து ஆசாரி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு, ஒரு நாள், பழையகரத்தில், எனது வீட்டில் நான் இருந்தபோது காலை 11.00 மணியவில், போலிசார் இரண்டு நாட்களுக்கு முன்பு, எனது வீட்டிற்கு 2 வீட்டிற்கு முன்பு இரண்டு நபர்கள் தகராறு செய்தது தொடர்பாக விசாரித்தார்கள்.

**என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1–வது கையொப்பம் என்னுடையதுதான். கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தினை எனது வீட்டிற்கு முன்பாக வைத்து செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரி. போலிசார் என்னிடம் இரண்டு நாட்களுக்கு இங்கு எதுவும் சம்பவம் நடந்தது தெரியுமா என்று கேட்டார்கள், கேள்விபட்டேன், யார் யாருக்கு பிரச்சினை என்று எனக்குத் தெரியாது. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப் பார்க்கவில்லை.

என்னுடன் சேர்ந்து வேறு யாரும் கையொப்பம் செய்தார்கள் என்றால் இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 29.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**